2006 ஜனவரி 24] [திரு. பி.கே. சேகர்பாபு]

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தீப்பிடித்து எரிந்ததாக எந்தத் தகவலும் தெரியவில்லை. எங்கு எரிந்தது என்று கூறினால், அதற்கு பாதுகாப்பான நடவடிக்கையை எடுப்பதற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) வால்பாறை தோட்டக் குடியிருப்புப் பகுதிகளில் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்க தெரு விளக்குகள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தோட்டக் குடியிருப்புப் பகுதிகளில் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச்சேதத்தைத் தவிர்க்க போதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சியில் 56 எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. வால்பாறை மூன்றாம் நிலை நகராட்சியில் மொத்தம் பின்வரும் தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன :

4 அடி குழல் விளக்குகள்	..	1702
சோடியம் ஆவி விளக்குகள்	...	125
மொத்தம்	..	**1827**

சத்யமேவ ஜயதே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

56 எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளில் 1676 தெரு மின்விளக்குகளும் ஏனைய நகராட்சிப் பகுதிகளில் 151 தெரு மின்விளக்குகளும் பராமரிக்கப்படுகின்றன.

மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.5.00 இலட்சம் உள்ளிட்ட ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் 98 தெரு மின்குழல் விளக்குகள் எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே உள்ள தெரு மின் விளக்குகளை பராமரிக்க மாதந்தோறும் ரூ.2.50 இலட்சம் மின்கட்டணமாகச் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி விளக்குகள் கூடுதலாக அமைக்கும்பட்சத்தில் ரூ.3.00 இலட்சம் பிரதி மாதம் மின் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருக்கும்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் ஒரு பெண், இரண்டு ஆண்கள் வேலை முடித்து வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது யானையால் தாக்கப்பட்டு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. தற்போது உள்ள தெரு மின்விளக்குகள் பராமரிப்பினால், யானைகள் மற்றும் சிறுத்தைப் புலிகளினால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படுவதில்லை.

எனவே, எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளில் இயங்கி வரும் தெரு மின் விளக்குகள் தற்போதைக்கு போதுமானதாக உள்ளது.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலுள்ள தேயிலை எஸ்டேட் குடியிருப்புகள் வாட்டர்பால்ஸ், கவர்கல், கருமலை, அக்காமலை, ஊசிமலை, பச்சமலை, அப்பர்பாரலை, வெள்ளமலை, சின்கோனா, நல்லகாத்தி, சோலையாறு, காஞ்சமலை, நல்லமுடி, முடீஸ், ஆனைமுடி, தோனிமுடி, கஜமுடி, வில்லோனி, தாய்முடி, ஹைபாரஸ்ட், வாகமலை, டாப் ஸ்லிப் போன்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் வனவிலங்குகளான யானைகள், சிறுத்தைப் புலிகள், பைசன் ஆகியவை தொடர்ந்து நாள்தோறும் வந்துகொண்டிருக்கின்றன என்பதை அரசுக்குத் தெரியப்படுத்துவது எனது கடமையென்று கருதுகின்றேன். வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், மாலை 6 மணிக்கு மேல் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு பயந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, தெரு விளக்குகள் அங்கே

LEGISLATURE TAMIL NADU ... TRUTH ALONE TRIUMPHS

2006 ஜனவரி 24] [திரு. கோவை தங்கம்]

பற்றாக்குறையாக இருப்பதால், பெண்களும், குழந்தைகளும் வெளியிலே வருவதற்கு மிகவும் பயப்படுகின்றார்கள். ஏற்கெனவே போதுமான தெரு விளக்குகள் இல்லாததால், யானைகள் இருட்டிலே நின்றுகொண்டிருக்கின்றன. குடியிருப்புப் பகுதிக்குச் செல்லுகின்றபோது, அந்தப் பாதையிலே நிற்பதால், கடந்த நாலரை ஆண்டுக் காலமாக சுமார் 15 பேர்களுக்கு மேல் யானைகளாலும், சிறுத்தைப் புலிகளாலும், பைசன்களாலும் தாக்கப்பட்டு இறந்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இன்னும் கூடுதலாக தெரு விளக்குகள் வழங்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், கோவை தங்கம் கடந்த நாலரை ஆண்டுகளில் 15 நபர்கள் அங்கு காட்டு வன விலங்குகளால் தாக்கப்பட்டனர் என்ற தவறான தகவலைக் கொடுத்திருக்கின்றார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், மூன்று நபர்கள் மட்டும் அந்தப் பகுதியிலே யானைகளால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கின்றார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, அந்த 56 எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளிலே போதிய தெரு விளக்குகளை அதாவது 1827 தெரு விளக்குகளைப் போட்டதிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இதுபோன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. மேலும் சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயிலும், மற்ற நிதியாதாரத்திலே 6 இலட்சம் ரூபாயிலும் ஆக 11 இலட்சம் ரூபாய் அளவிலே 98 மின்சார விளக்குகளை கூடுதலாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. கூடிய விரைவிலே அந்தக் கூடுதல் 98 மின்சார விளக்குகள் அந்தப் பகுதியிலே அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம்கூட நல்லகாத்தி, நல்லமுடி, காஞ்சமலை, முடீஸ்

[திரு. கோவை தங்கம்] [2006 ஜனவரி 24

உயர்நிலைப் பள்ளி, முடீஸ் மார்க்கெட், வாட்டர்பால்ஸ், கவர்கல், காஞ்சமலை, சின்கோனா ஆகிய பகுதிகளிலுள்ள கடைகளையும், வீடுகளையும் யானைகள் அடித்து நொறுக்கிவிட்டன. வனத் துறையினர் உடனே வந்து..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், விளக்கு போடுகிறேன் என்று அமைச்சர் சொல்லிவிட்டார்.

திரு. கோவை தங்கம்: ஒரே ஒரு நிமிடம். வனத் துறையினர் வந்து அந்த யானைகளை காட்டிற்குள் அனுப்பி வைத்தார்கள். இப்போது இருக்கின்ற தெரு விளக்குகள் போதவில்லையென்பதால், அங்கே யானைகளால் தாக்கப்படுகின்றார்கள், சிறுத்தைப் புலி, பைசன்களாலும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏராளமான தெரு விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. அங்கே பழுதடைந்த தெரு விளக்குகளை, வால்பாறை அலுவலகத்திற்குத் தகவல் கொடுத்து, அவர்கள் சென்று பார்ப்பதற்குக் காலதாமதம் ஆகின்றது. ஆகவே வால்பாறையிலே இருக்கின்ற மின்சார இலாகாவிலே போதுமான பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதோடு வால்பாறையிலே சோடியம் ஆவி தெரு விளக்குகள் அமைத்துக் கொடுத்தால் அங்கிருக்கின்ற வெளிச்சத்தின் காரணமாக, யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்கு வராமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல டாப் ஸ்லிப் செல்லுகின்ற பகுதி, வால்பாறை கீழ்ப் பகுதியிலே இருக்கின்ற ஊராட்சிகளுக்கும், கோட்டூர் பேரூராட்சி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி போன்ற பகுதிகளுக்கும் போதுமான தெரு விளக்குகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட எஸ்டேட் பகுதிகளிலே கிட்டத்தட்ட 1676 தெரு விளக்குகள் அங்கே எஸ்டேட் பகுதிகளில்தான் போடப்பட்டிருக்கின்றன. ஏனைய நகராட்சிப் பகுதிகளிலே 151 தெரு விளக்குகள் மட்டும்தான் இருக்கின்றன. ஆகவே அவர், கடந்த வாரம் என்று குறிப்பிட்டார், அந்த நேரத்திலே அந்தப்

2006 ஜனவரி 24] [திரு. கே.பி. அன்பழகன்]

பகுதியிலே எந்தவிதமான உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. மேலும் கூடுதலாக 98 மின் விளக்குகள் போடப்பட்டு அந்த நகராட்சிப் பகுதிகளிலே 56 எஸ்டேட் குடியிருப்புகளிலும் மேலும் தேவையான மின் விளக்குகள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது முதல் நூற்று முப்பத்து ஐந்தாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கையினை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

5. இடைக்கால வரவு—செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது